**ஊடக அறிக்கை**

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை

+94 11 2477424 / +94 11 2477421 +94 11 2346304

communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2026.03.16 |


# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2026 பெப்புருவரி

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2026 பெப்புருவரியில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிலும் விரிவடைதல்களை எடுத்துக்காட்டுகின்றன

**தயாரிப்பிற்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2026 பெப்புருவரியில் 56.8 சுட்டெண் பெறுமதியொன்றைப் பதிவுசெய்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் தொடர்ச்சியான விரிவடைதலினை எடுத்துக்காட்டியது.** அனைத்து துணைச் சுட்டெண்களும் இவ்விரிவடைதலுக்குச் சாதகமாகப் பங்களித்தன.

**கொ.மு.சு**
**தயாரிப்பு**
**2026 பெப்புருவரி**
**56.8**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்கள், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மெதுவான வீதமொன்றாக இருந்தபோதிலும் பெப்புருவரியில் விரிவடைந்தன. தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண்கள் மாதகாலப்பகுதியில் மேலும் விரிவடைந்து, பண்டிகைப் பருவகாலத்தை நோக்கி நிறுவனங்களின் தயார்படுத்தலைப் பிரதிபலித்தன. மேலும், மத்திய கிழக்கின் அமைதியின்மையிலிருந்து தோற்றம்பெறுகின்ற சாத்தியமான விநியோக அழுத்தங்களை எதிர்பார்த்து, முன்கூட்டிய கையிருப்பு சேமித்தலை சில நிறுவனங்கள் அறிக்கையிட்டன. அதேவேளை, வழங்குநர்களின் விநியோக நேரம் மேலும் நீட்சியடைந்து விநியோகச் சங்கிலிகள் மீதான அதிகரித்த அழுத்தத்தைக் காண்பித்தன.

***கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு***

| மாறி | சன. | பெப் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **56.1** | **56.8** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 58.5 | 55.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 57.5 | 54.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 51.5 | 58.6 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 56.0 | 60.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 55.0 | 59.6 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், எதிர்பார்க்கப்படும் பண்டிகைக்கால கேள்வியினால் தூண்டப்பட்டு சாதகமாகக் காணப்படுகின்றது. எனினும், மத்திய கிழக்கில் மோதல் தொடருமாயின் சாத்தியமான பாதகமான உள்ளார்ந்தங்கள் பற்றி பல பதிலிறுப்பாளர்கள் எச்சரிக்கையினை வெளிப்படுத்தினர்.

**உலகளாவிய தோற்றப்பாடு:**
**கொமுசு தயாரிப்புத் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **இந்தியா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **சீனா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **ஐக்கிய அமெரிக்கா** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **ஐக்கிய இராச்சியம்** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **யூரோ வலயம்** | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2026 மாச்சு 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2026 பெப்புருவரியில் 54.4 சுட்டெண் பெறுமதியொன்றைப் பதிவுசெய்து, கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலினை எடுத்துக்காட்டியது.**

வியாபார நடவடிக்கைகளில் விரிவடைதலானது அநேகமான துறைகளுக்கிடையில் பரந்த அடிப்படையிலமைந்த மேம்பாடுகள் மூலம் துணையளிக்கப்பட்டிருந்தது. இவ்வளர்ச்சி, தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணி நடவடிக்கைகளில் வலுவான செயலாற்றத்தினால் முதன்மையாகத் தூண்டப்பட்டிருந்தது. மேலும், தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் மற்றும் கல்வித் துறைகள் தொடர்ந்தும் நிலையான வளர்ச்சியினை எடுத்துக்காட்டின.

புதிய வியாபாரங்கள், ஏனைய தனிப்பட்ட பணி நடவடிக்கைளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றுடன் ஒன்றிணைந்து தங்குமிடம், உணவு மற்றும் குடிபானப் பணிகளுக்கான அதிகரித்த கேள்வியினால் துணையளிக்கப்பட்டு 2026 பெப்புருவரியில் தொடர்ந்தும் விரிவடைந்தது.

அதிகரிக்கின்ற வாடிக்கையாளர் கேள்வியினை நிறைவுசெய்வதற்கு நிறுவனங்கள் அவற்றின் தொழிற்படையினை விரிவுபடுத்தியமையினால் தொழில்நிலை 2026 பெப்புருவரியில் தொடர்ந்தும் அதிகரித்தது. அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகள் மாதகாலப்பகுதியில் துரித வேகத்தில் தொடர்ந்தும் குறைவடைந்தன.


**கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு**

| மாறி | 2026 சன. | 2026 பெப். | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **64.5** | **54.4** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய வியாபாரங்கள் | 60.8 | 53.8 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 59.2 | 55.1 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 48.9 | 47.6 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 76.9 | 65.9 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், எதிர்பார்க்கப்படும் பருவகாலக் கேள்வி, திட்டமிடப்பட்ட வியாபார விரிவுபடுத்தல்கள் மற்றும் முன்னெடுக்கப்படும் தொழிற்பாடு சார்ந்த மேம்படுத்தல் என்பன மூலம் துணையளிக்கபட்டு மேலும் வலுவடைந்தது. எவ்வாறிருப்பினும், மத்திய கிழக்கில் மோதல்கள் மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைகளின் பரந்த நிச்சயமின்மைகள் உள்ளடங்கலாக சாத்தியமான கீழ்நோக்கிய இடர்நேர்வுகளை சில நிறுவனங்கள் எடுத்துக்காட்டின.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2026 பெப்புருவரி**
**54.4**




**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்', 2026 மாச்சு 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

*கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - 2026 பெப்புருவரி அளவீட்டிற்கான தரவு சேகரித்தல் 2026 மாச்சு 14 வரை நடாத்தப்பட்டது.

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் விநியோக நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.